தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 12, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 ஏப்ரல் 25, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்."

நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சியுடன் வரவேற்றுப் போற்றுகின்றவருடைய வீட்டில் செல்வம் அளிக்கும் திருமகள் மனமகிழ்ச்சியுடன் தங்குவாள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 306, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

306—

கூடுதல் மின்மாற்றி

***15877—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, கத்தலூர் ஊராட்சி, செவந்தியாணிப்பட்டியில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், கத்தலூர் ஊராட்சி, செவந்தியாணிப்பட்டியில் கத்தலூர் SS II 110 K.V.A./11 K.V. *மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 20–4–2013 அன்று கூடுதலாக* 100 K.V.A./11 K.V. *திறனுள்ள மின்மாற்றி செவந்தியாணிப்பட்டியில் நிறுவப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காவல் துறை வரலாற்றிலே இந்தியாவில் வேறு எந்த மாநில முதல்வரும் நிகழ்த்தியிராத, மக்கள் நலம் காக்கின்ற, காவல் துறையின் நலம் காக்க சட்டமன்றப் பேரவையில் வரலாற்றுச் சிறப்புமிக்க 67 முத்தான அறிவிப்புகளை வெளியிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய காவல் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே, சட்டமன்றத்திலே கேள்வி தொடுக்கப்பட்டு, அது அவைக்கு வரும் முன்னரே மிக வேகமாக* 100 K.V.A./11 K.V. *திறனுள்ள புதிய மின்மாற்றியை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களுடைய சார்பிலே நெஞ்சார்ந்த நன்றிகளை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

இதேபோன்று, ஆலங்குடியில் விவசாயிகள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகளிலும் மின்மாற்றிகள் ஒன்றிரண்டு பழுதாகியிருக்கின்றன. அவற்றிற்குப் பதிலாக கூடுதல் மின்மாற்றிகளை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட புதுக்கோட்டை மாவட்டப் பகுதிகளில் தேவையான அளவிற்கு மின்மாற்றிகள் ஏற்கெனவே மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, புதிது புதிதாக தேவைகள் உருவாகிக்கொண்டேயிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளில் புதியதாக அல்லது கூடுதலாக மின்மாற்றிகளை நிறுவுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், அங்கே இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எனது பணிவான, அன்பான வேண்டுகோளையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

புதுக்கோட்டை மாவட்டத்தில், அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 1–6–2011 முதல் 31–3–2013 வரை 100 K.V.A. திறன் கொண்ட 118 மின்மாற்றிகளும், 280 K.V.A. திறனுடைய 36 மின்மாற்றிகளும் 200 K.V.A. / 22 K.W.L. திறனுடைய 13 மின் மாற்றிகளும் ஆக மொத்தம், அந்த மாவட்டத்திலே 167 மின்மாற்றிகள் புதியதாக மாற்றப்பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களைவிட மிகக் கூடுதலான அளவிற்கு அங்கே புதிய மின்மாற்றிகள் ஏற்கெனவே மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் மும்முனை மின்சாரம் வழங்குகின்றபோது மட்டும் மும்முனை மின்சாரத்தைப் பயன்படுத்தினால், இந்தப் பிரச்சினை வராது. மாறாக இருமுனை மின்சாரம் வழங்குகின்ற நேரங்களிலும் அவர்கள் அந்தந்த மின்மாற்றிகளிலே கெப்பாசிட்டர் என்ற கருவியைப் பொருத்தி, இருமுனை மின்சாரத்தை அவர்களாகவே மும்முனை மின்சாரமாக மாற்றி, ஒரே நேரத்தில் மும்முனை மின்சாரமும், இருமுனை மின்சாரமும் அங்கே உறிஞ்சப்படுவதால் ஒட்டுமொத்தமாக மின் பளு தாங்காமல் அடிக்கடி அங்கே இருக்கின்ற அனைத்து மின்மாற்றிகளும் பழுதடைந்துவிடுகின்றன. ஆகவே, எவ்வளவுதான் நாங்கள் மின்மாற்றிகளைப் புதியதாக மாற்றி மாற்றிக் கொடுத்தாலும் சில

இடங்களிலே 15 நாட்கள், 20 நாட்களுக்குக்கூட அந்த மின்மாற்றிகள் தாங்குவதில்லை; உடனடியாக பழுதடைந்து விடுகின்றன. சீரான, தடையற்ற மின்சாரத்தை வழங்க அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எடுத்து வருகின்ற நடவடிக்கையினாலே அனைவருக்கும் தடையற்ற மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது. அதற்கு முன்பாக மும்முனை மின்சாரம் வழங்குகின்ற நேரத்திலே மட்டும் விவசாயிகள் அந்த மும்முனை மின்சாரத்தைப் பயன்படுத்தினால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் அதிகம் வராது என்ற காரணத்தினால், நமது அன்பிற்குரிய விவசாயப் பெருங்குடி மக்களும், அந்தந்த நேரங்களிலே வழங்கப்படுகின்ற மின்சாரத்தை அந்தந்த நேரத்திற்குத் தகுந்தவாறு அவரவர்களுக்கு வழங்கப்படுகின்ற நேரத்திலே பயன்படுத்தி, கொஞ்சம் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று நானும் இந்த நேரத்திலே அவர்களை அன்போடும், பணிவோடும் கேட்டுக்கொள்கின்றேன். தாங்களே மின் கெப்பாசிட்டர்கள் பொருத்தி, மின்சாரத்தை உறிஞ்சிக்கொள்வது சட்டப்படி தவறாக இருந்தாலுங்கூட, விவசாயப் பெருங்குடி மக்கள் என்பதால் அம்மா அவர்களுடைய அரசு கருணையோடு, தாயுள்ளத்தோடு, விவசாயிகள்மீது கொண்ட கருணையின் காரணமாக, யார்மீதும் நடவடிக்கை எடுப்பதில்லை. இருந்தாலுங்கூட, நாங்கள் எங்களுடைய அன்பு வேண்டுகோளாக வைத்து, அதைக் கடைப்பிடிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உறுதுணை புரிய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியில் மறைந்த முதல்வர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணா கூட்டுறவு நூற்பாலையைக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைக் கொண்டு வந்தார்கள். அந்த இரண்டு இடங்களிலும் தற்போது தனியார் நூற்பாலைகளும், மக்கள் குடியிருப்புகளும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால் மருத்துவக் கல்லூரிக்கும், நூற்பாலைக்கும் பயனாக இருக்கும் எனக் கூறி அமர்கிறேன்.

2013 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கூட்டுறவு நூற்பாலை பகுதியிலும், மருத்துவமனை அமைந்திருக்கின்ற பகுதியிலும் எந்தளவுக்கு மின் பளு தேவை இருக்கிறதென்பதைக் கண்டறிந்து, தேவை ஏற்படின் அந்த இடத்திலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளைப்பற்றி அரசு ஆய்வு செய்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காரைக்குடி பகுதிக்கு உட்பட்ட தேவகோட்டை ஒன்றியத்தில் சக்கந்தி என்ற கிராமம் இருக்கிறது. 5 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கக்கூடிய மின்மாற்றியிலிருந்து அங்கே மின்சாரம் செல்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் பயன்படுத்தக்கூடிய குடிதண்ணீரும் மின்சாரமும் போதாத அளவிலே இருக்கின்ற காரணத்தினால் சக்கந்தியிலே புதிதாக ஒரு மின்மாற்றி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தேவகோட்டை பகுதியிலே, தேவை ஏற்படின் நிச்சயமாக ஒரு புதிய மின்மாற்றி அமைப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 307, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*